புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
Peer-Reviewed
ISSN : 2456-821X
UGC CARE LIST
UGC Care Listed Journal (2023 onwards)
Sacred Heart Research Publication, Sacred Heart College, Tirupattur-635601, Tamilnadu, India
Volume : 07, Issue : 01/02 - March 2023

================================================================

**இறையருட் கவிமணி கா. அப்துல் கபூர்**

**ஆசிரியர் விளக்கும் – மிக்க மேலானவனின் மிகுநாற் பண்புகள்**

---

*ஆய்வாளர்*
**அ.முஹம்மது யாசிர்,** *முனைவர் பட்ட ஆய்வாளர் (ப.நே.),*
*முதுகலைத் தமிழாய்வுத்துறை,*
*உருமு தனலெட்சுமி கல்லூரி,*
*பாரதிதாசன் பல்கலைக்கழகம்,*
*திருச்சி-19,தமிழ்நாடு.*

**நெறியாளர்**
**முனைவர். சை.ஆசிக் ஹமீது,** *உதவிப் பேராசிரியர்,*
*முதுகலைத் தமிழாய்வுத்துறை, உருமு தனலெட்சுமி கல்லூரி,*
*பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி-19, தமிழ்நாடு, இந்தியா.*

================================================================

**ஆய்வுச் சுருக்கம்**

*உலகில் பல்வேறு மொழி பேசும் மக்கள் தங்களுடைய நம்பிக்கையின் அடிப்படையில் இறைவனையும், அவனை வழிபடும் முறைகளையும் வகுத்து ஒரு சமுதாயமாக வாழ்கின்றனர். இவ்வாறு இறைவனுடைய உயர் பண்புகளையும் ஆற்றலையும் விவரித்து, அவன் மீது கொண்டுள்ள பக்தியை வெளிப்படுத்தும் வகையில் பல இலக்கியங்கள் தமிழில் தோன்றின. இதற்குச் சான்றாக சைவம், வைணவம், சமணம், பௌத்தம், கிறிஸ்துவம் போன்ற சமயங்களில் பக்தி இலக்கியங்களைக் குறிப்பிடலாம். அனைத்துலக படைப்புகளையும் படைத்தவன் ஒருவனே, அவனே அல்லாஹ். அவன் உலக மக்கள் அனைவருக்கும் பொதுவாக வழங்கப்பட்ட*

*இறைக் கட்டளையாகிய திருக்குர்ஆனை முஹம்மது நபிக்கு வழங்கினான். இவ்வாறு வழங்கப்பட்ட இறைமறையாம் திருமறையில் தன்னுடைய பண்புகளாக இறைவன் கூறுபவற்றை இறையருட் கவிமணி கா. அப்துல் கபூர் அவர்களின் மிக்க மேலானவன் மிகுநாற் பண்புகள் மூலம் ஆராயப்படுகிறது.*

***திறவுச் சொற்கள்*** *– கா.அப்துல் கபூர், மிக்க மேலானவன், திருகுர்ஆன், மிகுநாற் பண்புகள், படைத்தல்.*

***முன்னுரை***

*சமயங்கள் யாவும் மனிதர்களால் தோற்றுவிக்கப்பட்டதாகும். ஆனால் இஸ்லாம் ஓர் இறைவனாகிய அல்லாஹுவால் ஒட்டுமொத்த மனிதர்களுக்கும் அருளப்பட்ட மார்க்கமாகும். இஸ்லாம் என்ற சொல்லிற்கு கீழ்ப்படிதல் என்று பொருள் இறைவனுடைய கட்டளைகளை அவனால் படைக்கப்பட்ட மனிதர்கள் அடிபணிந்து வணங்குவது கட்டாயமாகும். மார்க்கம் என்ற சொல்லிற்கு நெறி, வழி என்பது பொருளாகும். உலகத்தை படைத்த இறைவன் அதில் பல்லாயிரக்கணக்கான உயிரினங்களை படைத்து மனிதர்களுக்கு பயன்படும் வகையில் பல ஏற்பாடுகளை செய்து வைத்தான். இவ்வாறு படைத்தல், ஒழுங்குபடுத்துதல், விதியை நிர்ணயித்தல், வழிகாட்டுதல் ஆகிய நான்கு பண்புகளும் ஒருங்கே பொருந்தியவன் அல்லாஹ்வே என்றும் அவன் மிக்க மேலானவனாக அமைவதற்கு அப்பண்புகள் அடிப்படையாக அமைகின்றன என்றும் திருக்குரானின் வசனங்களுக்கு இறையருள் கவிமணி கா அப்துல் கபூரின் விளக்கங்கள் இக்கட்டுரையில் ஆராயப்படுகிறது.*

***மிக்க மேலானவனின் மிகுநாற் பண்புகள்:***

*இறைமறையாகிய திருக்குர்ஆன் ஓர் அறிவு களஞ்சியமாகும். இந்த இறைமறையில் இறைவாக்குறுதிகள், எச்சரிக்கைகள், நன்மையை ஏவும் வசனங்கள், தீமையை விலக்கும் வசனங்கள், ஆகுமாக்கப்பட்டவை, தடுக்கப்பட்டவை என பல கோணங்களில் இறைவன் தன் வசனங்களை குறிப்பிடுகிறான்.அதில் இறைவன் தன்னுடைய ஆற்றலைப் பற்றி வெளிப்படுத்தி கூறும் செய்தி பின்வருமாறு காண முடிகிறது. அவை*

***"மிக்க மேலானவனாகிய உமது றப்பின் திருப்பெயரைத் தூய்மைப்படுத்துவீராக. அவனே அனைத்தையும் படைத்து ஒழுங்கு படுத்தினான். அவனே அவற்றிற்கு வேண்டியவற்றை நிர்ணயித்து அவற்றை அடையக்கூடிய வழிகளையும் அறிவித்தான்" (அல்குர்ஆன் : 87:1-3)***

*மேலே சொல்லப்பட்டவாறு இறைவன் நபிக்கு கட்டளையிடுகின்றான், மிக்க மேலானவனாக திகழும் தன்னுடைய திருப்பெயரை தூய்மைப்படுத்துவாயாக என்றும், அதற்கு காரணம் அவனுடைய பண்புகளாக திகழும் படைத்தல், செவ்வையாக்குதல் அல்லது ஒழுங்குபடுத்துதல், விதியை நிர்ணயித்தல், வழிகாட்டுதல் ஆகிய நான்கு பண்புகளும் அமைகிறது. இப்பண்புகளை பெற்ற இறைவன் ஒருவனே, அவனே அல்லாஹ் என்று தன்னைப் பற்றி இறைவன் வெளிப்படுத்துகிறான்.*

***மிக்க மேலானவனின் படைப்பு:***

*படைக்கும் ஆற்றல் கொண்ட இறைவன் ஒருவன் என்பதால் இவ்வுலகம் சிறப்பாக அமைக்கப்பட்டிருக்கிறது. எத்தகைய முரண்பாட்டையும், வேறுபாட்டையும் நாம் காண முடிவதில்லை. இவற்றை மெய்ப்படுத்தும் வகையில் இறைவன் திருக்குர்ஆனில்*

***"நபியே நீங்கள் கூறுங்கள்; இவ்வளவு பெரிய பூமியை இரண்டே நாள்களில் படைத்தவனை நீங்கள் நிராகரித்துவிட்டு மற்றவைகளை அவனுக்கு இணையாக்குகின்றீர்களா? அவன்தான் உலகத்தார் அனைவரையும் படைத்த இறைவன். அவனே பூமியின் மீது பெரும் மலைகளை அமைத்து, அதில் எல்லாவிதமான பாக்கியங்களையும் புரிந்தான். அன்றி, அதில் வசிப்பவர்களுக்கு வேண்டிய உணவையும் நான்கு நாள்களில் நிர்ணயம் செய்தான். அதுவும் நல்லவர்கள் தீயவர்கள் என்ற வித்தியாசமின்றி கேட்பவர்கள் அனைவருக்கும் சமமாகக் கிடைக்குமாறு செய்தான். (அல்குர் ஆன் : 41:9-10)***

***இரண்டு நாட்களில் பூமியை படைத்து, நான்கு நாட்களில் அதில் பரக்கத் செய்தான். பூமியில் மண்வளத்தை சரியாக வைப்பது, அதில் கனிம வளத்தை வைப்பது போன்ற விஷயங்களை, நான்கு நாட்கள் செய்தான். பூமியில் மண்வளம் இல்லாவிட்டால் விவசாயம் செய்ய முடியாது. கனிம வளம் இல்லாவிட்டால் மனிதனின் தேவைகள் நிறைவேறாது. அல்லாஹ் மனிதனுக்கு தேவையானதை மண்ணிலிருந்து கிடைக்கச் செய்தான். காலம் செல்ல செல்ல மக்கள் தொகை பெருகத் தொடங்கியது. அத்துடன் பூமியிலிருந்து உற்பத்தியும் பெருகியது. தண்ணீர், காய்கறி, பழங்கள், இதர பொருள்கள் அனைத்தும் அன்று இருந்த மனிதர்களுக்கு கிடைத்தது போல் இன்றும் கிடைக்கிறது. இனியும் கிடைக்கும்." (மவ்லானா ஷஃபீ அஹ்மது தாவூதி, மனாருல் ஹுதா,பக்:33*** *மேலச்சொல்லப்பட்டவாறு இறைவன் பூமியை படைத்து அவற்றில் மனிதன் வாழ்வதற்கு தேவையான மூலக்கூறுகளையும் படைத்திருப்பதை அறிகிறோம். மேலும் இறைவனின் இத்தகைய படைப்புச் சான்றை விளக்கும் வகையில் திருக்குர்ஆனில் இன்னொரு இடத்தில் கூறும்போது,*

***"அல்லாஹ் மிக்க புனிதமானவன்; படைக்கிறவர்களில் மிக்க அழகானவன். அவன் ஏகன்; அவனே அனைத்தையும் அடக்கி ஆள்பவன்."( அல்குர் ஆன்: 13:16)*** *என்ற இறைமொழியும் இறைவன் ஒருவன்தான் படைப்பாளன் என்பதை விளக்குகிறது. இறைபண்புகளாக திகழும் படைத்தல், செவ்வை படுத்துதல், நிர்ணயித்தல், வழிகாட்டுதல் ஆகிய பண்புகளை பெற்றிருப்பதையும் காட்டுகிறது. அந்த வகையில் அனைத்தும் வல்ல அல்லாஹ்வின் பல்லாயிரக்கோடி படைப்புகளில் தாவரங்கள், விலங்குகள், நீர்வாழ் உயிரினங்கள், பறவைகள் ஆகிய நான்கு பிரிவுகளிலும் இறைவனின் படைப்பாற்றலைப் பற்றி இங்கு காணலாம். ஒவ்வொரு படைப்பினத்தின் உட்பிரிவிலும் பல இனங்கள் அமைந்திருப்பதை ஆசிரியர் பின்வருமாறு வெளிப்படுத்துகிறார்.*

***"எங்கும் காணப்படும் சாதாரண புல்லினத்தில் மட்டும் 4500 இனங்கள். பூச்சிகளில் ஆறு லட்சத்திற்கு அதிகமான இனங்கள். மரவகைகளில் 3500. எறும்புகளில் 5000. மீன்களில் இருபதினாயிரம். வண்ணத்துப் பூச்சிகளில் பதினாலாயிரம். வாழை மரத்தில் 200. நாய்களில் 225. குதிரைகளில் 150 என்றிவ்வாறாக ஒவ்வொரு பிரிவிலும் பல இனங்கள் இருக்கின்றன. இப்படைப்புகளில் அமைந்துள்ள அற்புதங்கள் நமது சிந்தைக் கினிய விருந்தாக அமைந்துள்ளன."(கவிமணி கா. அப்துல் கபூர், மிக்க மேலானவன், பக்:41)*** *என்று இறையாற்றலின் படைப்புத்தன்மையை வியந்து போற்றுகிறார்.*

***தாவரப் படைப்புகள்:***

*தாவர வகையில் அமைந்துள்ள சிறு விதையில் பெரும் மரமாக வளர்ந்து பார்ப்பவர்களுக்கு ஆவென வியக்கத்தக்க சென்னையம் பதியின் அடையாறு ஆலமரம் 520 விழுதுகளுடன் 3000 பேர் அமர்ந்திருக்கத் தக்க நிழலையும் கொடுக்கிறது. அதே போன்று ஆந்திர பிரதேசம் அனந்தப்பூரிலிருந்து 118 கி.மீ. தொலைவிலுள்ள ஓரிடத்தில் 563 ஆண்டு பழமையுடைய ஒரு ஆலமரம், 1457 விழுதுகளுடன் ஐந்து ஏக்கர் பரப்பளவில் விளங்குகிறது. தாவர இனத்தில் மிகப்பெரிய செக்குவாயா பதினைந்தரை மீட்டர் சுற்றளவுடன் 113 மீட்டர் உயரமாக வளர்ந்து 200 ஆண்டு ஆயுளைக் கொண்டுள்ளது. தென்னமெரிக்காவின் தென்கோடி கடலில் 186 மீட்டர் உயரத்தில் 'மாக்ரோ சைட்டிக் பைரிபெரா'என்னும் செடி வளர்ந்துள்ளது. 'உலக்கைக் கள்ளி பத்தாண்டுகளுக்கு இரண்டு சென்டிமீட்டர் வீதம் 15 மீட்டர் உயரம் வளர்ந்துள்ளது என்பதை அறியலாம். 33 ஆண்டுகளுக்கு ஒரு முறை பூக்கும் டைட்டன் அரும்பு ஆறு அடி உயரமுடியது. தாவர வகையில் உள்ள ஓக் மரத்தின் வேர்களை ஒன்றாக இணைத்தால் உலகத்தை ஒருமுறை சுற்றி கட்டிவிடு அளவிற்கு அதிகமான வேர்களை கொண்டு உள்ளதைக் காணலாம். இவ்வாறு பல வகையில் அற்புதமான படைப்புகளையெல்லாம் இறைவன் தாவர இனத்தில் படைத்து இந்த உலகில் வாழும் மக்களுக்கு மேலான உதவியை வழங்குகிறான் என்பதை அறிய முடிகிறது.*

***விலங்கினப் படைப்பு:***

*விலங்கினத்தை எடுத்துக் கொண்டோம் என்று சொன்னால் அதில் மிகப் பழங்காலத்தில் 90 அடி நீளமும் 40 முதல் 50 டன் எடையும் உடைய டைனோசர் என்னும் விலங்கு வாழ்ந்திருப்பதை அறியும்போது நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது. அதே போன்று இன்றைய காலத்தில் வாழும் யானை இனத்தில் 20 முதல் 25 அடி வரை உயரம் உள்ள யானைகள் ஆப்பிரிக்காவில் வாழ்வதைக் காண்கின்றோம். முதலையின் வயிற்றில் சுரக்கும் நீர், இரும்பையும் செரிக்கச் செய்யும் அளவுக்கு தன்மை கொண்டது. இந்தியாவில் மட்டும் ஒரு வினாடிக்கு 30 எலிகள் பிறக்கின்றன என்ற கணக்கெடுப்பு உள்ளது. இவ்வாறு உலகில் பல அற்புதமான விலங்குகளை படைத்து அவற்றிற்கு சிறப்பு தன்மையை வழங்கியுள்ளதையும் ஆசிரியர் வெளிப்படுத்துகிறார்.*

காட்டிலும் வீட்டிலும் வாழும் விலங்குகள் விசித்திரமான படைப்பாக திகழ்கிறது அவற்றில் அதிக உயரம் கொண்ட ஒட்டகச்சிவிங்கியின் குட்டி தாய் வயிற்றிலிருந்து வெளிவரும் போது உயரத்திலிருந்து விழுவதால் சில நேரங்களில் இறந்து விடுவதுண்டு, அது தன் காலால் உதைக்கும் போது சிங்கம் கூட இறந்துவிடும் அளவுக்கு கால்கள் வலிமை வாய்ந்தது இருக்கிறது. கங்காரின் குட்டி பிறக்கும்போது பென்சில் துண்டை போல் இருந்து விரைவாக வளரும் தன்மையுடையதாக உள்ளது. பசுவிற்கு இரைப்பை நான்குள்ளது. ஒன்றில் உணவை நிரப்பி ஓய்வான நேரத்தில் அசைபோட்டு இரண்டாவது பையில் சேர்த்து வைக்கும், மூன்றாவதில் உருண்டையாக்கி நான்காவதில் சீரணிக்கச் செய்யும். இவ்வாறு ஒவ்வொரு விலங்கும் பல சிறப்புத் தன்மைகளைப் பெற்றுள்ளதைக் காணலாம். மலாயா நாடுகளில் 33 அடி நீளமுள்ள மலைப்பாம்புகள் உள்ளன. புனுகுப் பூனையின் அருவருப்பான பகுதியிலிருந்து விலை மிகுந்த விரைப்பொருள் தோன்றுகிறது. அதேப் போன்று கஸ்தூரி மானின் கழிவு பொருளில் கஸ்தூரி என்ற வாசனை பொருள் தோன்றுவதையும் அறியலாம். இவ்வாறு நிலத்தில் வாழக்கூடிய பல்லாயிரக்கணக்கான உயிரினங்கள் இறைவனின் படைப்பாற்றலை வெளிப்படுத்துகிறது.

**பறவைகளின் படைப்பு:**

பறவைகளின் படைப்பை உற்று நோக்கும் போது அதிலும் இறைவனுடைய அற்புதங்களைக் காணலாம். அவற்றில் 'அலெக்சாந்திரியா அரசி' எனப்படும் வண்ணத்துப்பூச்சியின் இறக்கை மூன்றடிக்கும் மேல் அதிகமான நீளத்தை உடையது என்பதை காணலாம். இதைப்போலவே ஆசிரியர் பின்வரும் பல பறவைகளைப் பற்றிய குறிப்பை வெளிப்படுத்துகிறார்.

**"நாரை இறகின் நடு நரம்பின் உட்புறத்தில் எண்ணாயிரம் கொக்கிகள் இருக்கின்றன. தேனீயின் விழியில் 1200 அடிகள் (லென்சுகள்) உள்ளன. மரங்கொத்திப் பறவை மணிக்கு 1500 வேகத்தில் மரத்தைக் கொத்துகிறது. சிட்டுக்குருவி தன் குஞ்சுகளுக்கு ஒரு நாளைக்கு 300 தடவை உணவு ஊட்டுகிறது. 'பதினேழாண்டு சிசெடார்' என்னும் பறவை முட்டையிலிருந்து வெளிவர 17 ஆண்டுகளாகும். கிவி என்னும் பறவையின் முட்டை அதன் பருமனுக்கு முக்கால் பங்கு இருக்கும். புறாக்கள் எப்போதுமே இணை பிரிவதில்லை. புறாக்கள் கண்களை மூடிக்கொண்டிருக்கும்மே தவிர தூங்குவதில்லை. உடல் நலம் குன்றிய புறாக்கள் மட்டுமே தூங்கும்."(கவிமணி கா. அப்துல் கபூர், மிக்க மேலானவன், பக்:43)** என்று இறையாற்றலின் படைப்புத்தன்மையை வியந்து போற்றுகிறார்.

இரைச்சிக்காகவே வளர்க்கப்படும் அமெரிக்கா வான்கோழிகள் 2.5 அடி உயரமும் 14 பவுண்டு எடையும் உடையது. அவை வருடத்திற்கு 50 முதல் 60 முட்டைகள் வரை இடக்கூடியது இவ்வாறு பறவைகளின் மாமிசமும் அதன் முட்டைகளும் பல வகைகளில் மக்களுக்கு பயன்படுவது காணலாம்.

*நீர் வாழ் உயிரினங்களின் படைப்பு:*

*நிலத்தின் பரப்பளவை விட கடலின் பரப்பளவு மூன்றில் இரண்டும் பங்கு பெற்றுள்ளதால் நிலவாழ் உயிரினங்களைக் காட்டிலும் கடல் வாழ் உயிர்கள் மிக அதிகம். ஒரு மில்லி மீட்டர் நீளமுள்ள மிஸ்டிக் மீனிலிருந்து 37 மீட்டர் நீளமும் 160 டன் எடையுமுடைய நீலத்திமிங்கலம் வரையில் பல்லாயிரக்கணக்கான மீனினங்கள் நீருக்கடியில் வாழ்கின்றன. நீரில் வாழும் உயிரினங்களில் சிலவகை மீன்கள் உணவுக்காகவும், மனித நோய் தீர்க்கும் மருந்தாகவும் பயன்படுகின்றது. அந்த வகையில் மீனினத்தின் தன்மைகளை ஆசிரியர் பின்வருமாறு விளக்குகிறார்.*

***"பாக்டீரியாக்களையும் வைரஸ் கிருமிகளையும் அழிக்கும் 125 ரசாயனப் பொருட்கள் கடல்வாழ் உயிரினங்களிலிருந்து மனித குலத்திற்குக் கிடைப்பதாக ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர். புரதம், கொழுப்பு, வைட்டமின் ஏ,டி, கால்சியம், மெக்னீசியம், சோடியம், பாஸ்பரஸ், பொட்டாசியம், குளோரின் ஆகிய சத்துக்கள் மீன்களிலிருந்து நமக்குக் கிடைக்கின்றன. நோய்களுக்கும், ஈன்ற தாய்மார்களுக்கும் பால் சுறா பயன் மிக்கது. சோர்வுற்ற தசைகளைத் தூண்டக்கூடிய மருந்துப் பொருட்கள் நட்சத்திர மீனிலிருந்து பெறப்படுகிறது. திருக்கை மீனின் வாலிலுள்ள கொடுக்குப் போன்ற முள்ளின் விடம், இருதய அறுவை சிகிச்சைக்குப் பயன்படுத்தப்படுகிறது. ஒருவகை இறால் மீனிலிருந்து பென்சிலினை விட ஆற்றல் மிக்க நுண் கிருமிநாசினி உற்பத்தியாகிறது. தேரை மீனின் உடலிலிருந்து உண்டாகும் இரசாயனப் பொருள் இரத்தத்திலுள்ள சர்க்கரையை அழித்து விடுகிறதாம். கடல் பஞ்சில் காச நோய்க்கு மருந்து. கடல் வெள்ளரி மீன் புற்று நோய்க்கு மருந்தாகவும் பயன்படுகிறது." (கவிமணி கா. அப்துல் கபூர், மிக்க மேலானவன், பக்:45,46)*** *மேலே சொல்லப்பட்டவாறு தாவரங்கள், விலங்குகள், பறவைகள், நீர்வாழ் உயிரினங்கள் ஆகியவற்றில் இறைவனுடைய படைப்பாற்றலின் தன்மையை விளக்கும் வகையில் சிறப்புர எடுத்துக் கூறுகின்றார்.*

***2. செவ்வைப்படுத்துதல் அல்லது ஒழுங்குப்படுத்துதல்:***

*அனைத்து உயிரினங்களையும் படைத்த மிக்க மேலானவன், அவை உயிர் வாழ்வதற்குரிய உடல் உறுப்புகளான கண், காது, மூக்கு, வாய், உடல் போன்றவைகளையும் ஆற்றல்மிக்கதாக செவ்வையாக பொறுத்தியிருக்கின்றான்.* ***"ஈருலகத் தென்றல் எம்பெருமானார் நபி (ஸல்) அவர்கள் நம்மை ஈயைப் பற்றி சிந்திக்க வைக்கிறார்கள். "உங்களின் ஒருவரின் பாத்திரத்தில் ஈ விழுந்துவிட்டால் அதை முழுமையாக முக்கி எடுத்துப்போடுங்கள். ஏனெனில் அதன் இரு இறக்கையில் ஒன்றில் விஷமும் மற்றொன்றில் அதன் முறிவு நிவாரணமும் இருக்கின்றன."(நூல்:புகாரீ ஷரீப்) இதிலிருந்து ஈக்கள் உணவு குடிபானங்களில் விழுந்தால். அவை அசுத்தமல்ல என்றும், அதனை முழுமையாக முக்கி எடுத்து அப்புறப்படுத்துவதால் நமக்கு நலனிருக்கிறது என்றும் அறிவியல் சார்ந்த அற்புதமான கருத்தை அன்றே அல்லாஹ்வின் தூதர் நபி(ஸல்) அவர்கள் அறிவித்துள்ளார்கள்"(ஜே.ஏ.நைனார் முஹம்மது பாகவீ, குர்ஆனின் குரல்,***

***பக்:88)*** *இவ்வாறு இறைவன் சில உயிரினங்களுக்கு அதன் உடலில் விஷத்தையும் அந்த விஷயத்தை குணப்படுத்தும் மருந்தையும் சேர்த்தே படைத்திருக்கிறான். என்பதை அவனது செவ்வைப்படுத்தும் பண்பை விளக்குகிறது. இதேப்போன்று கண்ணைப் பற்றி பார்க்கும் போது, பிறரிடம் அன்பு காட்டும் மனிதன் கண்ணே மணியே என்று செல்லமாக அழைப்பது வழக்கம். அந்த வகையில் தாயின் வயிற்றில் குழந்தைக்கு முதலில் தோன்றும் உறுப்பு கண்ணாகும். மானிடக் கண்ணில் இருநூறு வகையான வண்ணச் சேர்க்கையுள்ளது. அதேப்போன்று வானில் பறக்கும் வல்லூறு தன் இறையாகிய எலியை 5 கிலோமீட்டர் உயரத்திலிருந்து பார்க்கும் ஆற்றல் உடையது, ஏனெனில் பறவையின் விழித்திரையில் 15 லட்சம் செல்கள் உள்ளன. ஆந்தையானது காரிருளில் கூட தெளிவாகப் பார்க்கும் தன்மையுடையது. பறவைகளில் பெரியதான நெருப்புக்கோழிக்குப் பந்தைப் போல் பெரிய கண்கள் உள்ளன. இவை போன்று பல உயிரினங்களின் கண்களுக்கு இறைவன் பல ஆற்றல்களை அதன் வாழ்க்கைக்கு தக்கவாறு படைத்துள்ளான்.*

*பார்வையைப் போன்றே மோப்பாற்றலையும் உயிரினங்களுக்கு பொருத்தமான முறையில் வல்ல நாயன் வழங்கியிருப்பதைப் பார்ப்போம். மனிதனின் மோப்ப ஆற்றலை விட 100 மடங்கு அதிகமானது நாயின் மோப்ப சக்தி. அதனால் குற்றவாளிகளையும், உலோகத் தாதுக்களையும், காகித நாணயங்களின் வேறுபாட்டையும் கண்டுபிடிக்க உதவியாக இருக்கிறது. தொலைவிலுள்ள தேனை மோப்பம் பிடிக்க தேனிக்கு 5000 நுட்பமான மோப்பத்துளைகள் கொண்டுள்ளது. விட்டில் பூச்சி கூட ஐந்து கிலோமீட்டர் தொலைவில் உள்ள தன் இனத்தை உணர்ந்து கொள்கிறது. நீர் வாழ் உயிரினமான சுறாவுக்கு மோப்ப ஆற்றல் மிகுதி. அது கடலில் காயம் பட்டவனின் ரத்தத்தை மோப்பம் பிடித்து விரைந்து சென்று பிடித்துள்ளோம். இவ்வாறு படைப்பினங்களுக்கு ஏற்றவாறு அதன் மோப்பத்தை இறைவன் வழங்கியுள்ளான்.*

*இவை போன்று உயிரினங்களின் நாக்கும், பற்களும் அமைகின்றன. லெமூர் என்னும் பிராணிக்கு மேல் கீழாக இரு நாக்குகளும், எறும்புண்ணிக்கு புற்றிலிருக்கும் கரையான்களை பிடிப்பதற்கு ஏற்ற வகையில் கம்பிபோல் நீளமான உருண்டை நாக்கு உள்ளது. பாம்பின் நாக்கு வாசனை அறியவல்லது, அதனால் அவை நாக்கை அடிக்கடி வெளியில் நீட்டுகிறது. மான்கள் தாவரத்தை சுவைத்துண்ண அதன் நாக்கில் ஐம்பதாயிரம் சுவை அரும்புகளைப் பெற்றுள்ளது. சுவைப்பதையே தொழிலாக கொண்ட மனிதனின் நாக்கில் ஒன்பதாயிரம் சுவை அரும்புகள் உள்ளன. உயிரினத்தின் பற்கள் உணவுகளை அசைப் போடுவதற்கு மட்டுமல்லாமல் பாதுகாப்பு அறன்களாகவும் திகழ்கின்றன. மனிதனுக்கு 32 பற்கள், நாய்க்கு 42 பற்கள், முதலைக்கு 68 பற்கள் உள்ளன. யானைக்கு அதன் ஆயுள் காலத்தில் நான்கு முறை பற்கள் விழுந்து முளைக்கும். முயலுக்கு மேலும் கீழும் இரண்டு பற்கள் தேயத்தேய வளரும். புலி, சிங்கம் போன்ற வேட்டை விலங்குகளின் பற்கள் மிகக் கூர்மையானதாக இருக்கும். இவ்வாறு ஒவ்வொரு உயிரினத்தின் பற்களும் அமைந்துள்ளது. விலங்குகளுக்கு இருக்கும் கொம்புகளும், தந்தங்களும் அவற்றின்*

*பாதுகாப்பு கருவியாக விளங்குகிறது. மனிதனை தவிர்த்து மற்ற உயிரினத்திற்கு வாள்கள் உள்ளன.பறவைகளின் கால் நகங்களும், அலகுகளும் இறையை கிழித்துண்ண உதவுகிறது. இவ்வாறு உலகில் வாழ் உயிரினங்களின் தேவைக்கு ஏற்றவாறு உடல் உறுப்புகளை ஒழுங்குப்படுத்தி உள்ளான் இறைவன்.*

***3. விதியை நிர்ணயித்தல்:***

*படைப்பினங்களை செவ்வைப்படுத்திய இறைவன் அதற்கு 'தக்தீர்' என்று சொல்லப்படும் விதியை நிர்ணயித்து உள்ளான். அதன் மூலம் அவற்றின் வாழ்க்கை முறைக்கு தேவையான வழிகளை உண்டாக்கியுள்ளான். அதனை இறைமொழி மூலம் ஆசிரியர் விளக்குவதை காணலாம்.* ***"அல்லாஹ் எந்த ஆத்மாவையும் அதன் சக்திக்கு மேல் சிரமப் படுத்துவதில்லை'(அல்குர் ஆன் :2:286) என்பது இறைமொழி. இதுவே உலகத்திலுள்ள படைப்பினங்கள் அனைத்திற்கும் பொருந்தக்கூடிய தக்தீர் என்னும் விதியாகும். மனிதனுக்குரிய தக்தீருக்குத் தக்கபடியே சரீ அத்துப் சட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதுவே முன்னரே நிர்ணயிக்கப்பட்ட தக்தீராகும். 'எந்தப் பொருளாகயிருந்தாலும் சரி, அதனுடைய கருவூலம் நம்மிடம் இல்லாமலில்லை'(அல்குர் ஆன் :15:21) என்பதாக இறைமறை இயம்புகின்றது. ஆழ்ந்த கருத்தினைத் தாங்கியுள்ள இவ்வசனம், இரவு, பகல், சூரியன், சந்திரன் ஆகிய அனைத்தும் தக்தீருக்குக் கட்டுப்பட்டுள்ள தென்பதை எடுத்துக்காட்டுகின்றது."(கவிமணி கா. அப்துல் கபூர், மிக்க மேலானவன், பக்:53)***

*படைத்த இறைவன் ஒவ்வொரு உயிரினங்களுக்கும் ஒரு வகையான வாழ்க்கை முறையை விதியாக்கியுள்ளான். அதன்படி அவை தன்னுடைய வாழ்க்கையை வாழ்ந்து வருகிறது. அவற்றிற்கான உணவு, இருப்பிடம், இனப்பெருக்கம் போன்றவற்றை ஆராயும் பொழுது நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது.* ***"பறவைகளில் அல்லாஹ் மிக அற்புதமானவைகளையும் படைத்துள்ளான். ஸ்விஃப்ட்(Swift) எனும் பறவை மூன்றாண்டுகள் தரையை தொடாமல் கடலுக்கு மேலேயே பறக்கும். தூங்கும் போது இறக்கையில் தலை வைத்து தூங்கும், உணவு நீர் அனைத்தும் வானத்திலேயே பூர்த்தி செய்து கொள்ளும், சுப்ஹானல்லாஹ்! என்ன ஆச்சரியம்! ஸ்வேகா(Sweha) என்ற பறவை கலிபோர்னியாவிலிருந்து அர்ஜெண்டினாவிற்கு இனவிருத்திக்காக நான்கு மாத காலம் பத்தாயிரம் கிலோ மீட்டர் வரை பறக்கும், தரை இறங்காது; பசிக்கும் போது தன்னிடமுள்ள ஒரு குச்சியை ஊன்றி கடலில் உணவு தேடிக்கொள்ளுமாம். பறவையைக் கண்டான் விமானம் படைத்தான் என்ற முதுமொழி மனிதப் படைப்பிற்கு முன்மாதிரியாக விளங்குவது அல்லாஹ்வின் அற்புத படைப்பு தான் என்ற பாடத்தை அறிகிறோம். " (ஜே.ஏ.நைனார் முஹம்மது பாகவீ, குர்ஆனின் குரல், பக்:93-94)***

*படைப்பினங்களின் சுவாச முறையை அடிப்படையாகக் கொண்டு அவை வாழும் காலங்களை இறைவன் நிர்ணயித்துள்ளான். அமைதியாக வாழும் ஆமை நிமிடத்திற்கு ஒருமுறை மூச்சு விடுவதால் 300 ஆண்டுகளும், இரண்டு நிமிடத்திற்கு ஒரு முறை மூச்சு விடும்*

*தேரை 600 ஆண்டுகளும், நிமிடத்திற்கு 26 முதல் 40 வரை மூச்சு விடும் குதிரை 5 ஆண்டுகளும், நிமிடத்திற்கு 90 முதல் 100 வரை நாய்கள் சுவாசிக்கின்றன. மனிதர்கள் நாளுக்கு 21600 சுவாசங்கள் நடத்தினால் 120 ஆண்டுகள் வரை வாழலாம் என மூச்சுப் பயிற்சியாளர்கள் கூறுகின்றனர்.*

*பறவைகளின் எண்ணிக்கை அளவிற்கு அதன் கூடுகளும் அமைந்திருக்கின்றன. ஒரு கூட்டின் வடிவமைப்பை பொறுத்து அதில் எந்தப் பறவை வசிக்கின்றது என்பதை கண்டுவிடலாம். எந்தவிதமான முன்மாதிரியும் இல்லாமல் பறவைகள் தங்களுக்குரிய கூட்டை மரக்குச்சி, இலைகள், தான் உண்ட மீன் முள், மண், சருகு, புல் போன்றவற்றைக் கொண்டு கூடுகட்டி வாழ்கின்றன. இத்தகைய அறிவையும், ஆற்றலையும் அவற்றிற்கு இறைவன் வழங்கியிருப்பது அதற்கான விதியாகும். அதேபோன்று படைப்பினங்களின் காதல் உணர்வும் போற்றத்தக்கது. ஆண்மான்கள் பாலைவனத்தில் தான் கண்ட நீரை பருகாமல் தன்இணை பருகும் வரை தண்ணீரில் வாயை வைத்துக் கொண்டு பாசாங்கு செய்யும். ஆண் குரங்கை நீங்கிய பெண் குரங்கு தன் குட்டியை உறவினர்களிடம் ஒப்படைத்துவிட்டு மலையிலிருந்து கீழே விழுந்து இறந்து விடுமாம். புறாக்கள் தன் இணையை பிரிவதில்லை. ஒட்டகம் தன் இணையுடன் மட்டுமே சேரும் நிலையை படைத்துள்ளான்.*

*தாய் உயிரினங்கள் குட்டிகளுக்கு உணவை ஊட்டுவதும், அவற்றிற்கு வேட்டையாட கற்றுக் கொடுப்பதும் இறைவிதியாகும். தூக்கத்தின் மூலம் உயிரினங்களுக்கு உடல் நலனையும், மன வளர்ச்சியையும் இறைவன் அமைத்துள்ளான். அந்த வகையில் மனிதன் 100 ஆண்டு காலம் வாழ்கிறான் என்றால் 23 ஆண்டுகள் தூக்கத்தில் செலவிடுகிறான், அவன் தொடர்ச்சியாக 14 நாட்கள் உறங்காமல் இருந்தால் இறந்துவிடுகிறான். பூனைகள் நாள் ஒன்றுக்கு 16 மணி நேரமும், நத்தைகள் 3 ஆண்டுகள் முதல் 4 ஆண்டுகள் வரை தூங்கவும் செய்கிறது. விலங்குகள், பறவைகள் ஆகியவற்றின் ஓசைகள் அவற்றிற்கான மொழியாகும். பறவைகளின் ஓசைக்கு தக்கவாறு நேரங்களையும் அறிந்து கொள்ளலாம். பறவைகள் அனைத்தும் பறக்கும் ஆற்றலை பெற்றிருக்கின்றன. அவற்றில் மிக வேகமாக பறக்கும் பறவையான ஸ்விஃப்ட் என்ற பறவை மணிக்கு 170 கிலோமீட்டர் வேகத்தில் பறக்கிறது. சில பறவைகள் 50 முதல் 100 மயில் வரையிலும் செல்லும். இவ்வாறு உயிரினங்களின் வாழ்க்கைக்கு தக்கவாறு பல சிறப்பு அம்சங்களைக் கொண்டு இறைவன் படைத்து அவை யாவும் மனிதனுக்கு பயன்படும் வகையில் அமைத்துள்ளான். இவை வல்ல நாயகன் மனிதனுக்கு கொடுத்த பொக்கிஷமாகும். இவற்றின் மூலம் உயிரினங்களுக்கான விதியை இறைவன் எவ்வாறு நிர்ணயித்துள்ளான் என்பதை அறியலாம்.*

***4. வழிகாட்டுதல்:***

மிக்க மேலானவனின் நான்காவது பண்பு 'ஹிதாயத்' என்னும் வழிகாட்டுதலாகும். மனித குலத்திற்கு மாமறையான திருக்குர்ஆன் நேர்வழி காட்டியாகவும், அருள்கொடையாகவும்

*அமைத்துள்ளான். 'நேரான வழியில் எங்களைச் சீராய் நடத்துவாயாக' என்பது நன்னெறியாளர்களின் இறைஞ்சதலாகும். உலகவாழ் உயிரினங்களுக்கு நாயன் வழிக்காட்டுகின்ற முறை ஆராய்ச்சியாளர்களை வியப்பிலாழ்த்துகின்றது. ஒரு பறவை தன்னுடைய கூட்டை விட்டு நெடுந்தலைவுகள் பயணம் செய்தாலும் தன் கூட்டின் இருப்பிடத்தை சரியாக அடைந்து கொள்ளும் வழிகாட்டுதலை இறைவன் வழங்கியுள்ளான். இதனை பற்றி ஆசிரியர் கூறும் செய்தியை பின்வருமாறு காண்போம்.*

***"பறவைகளின் நுட்ப உணர்வும், பூமியின் காந்த ஈர்ப்பும், சூரிய சந்திர விண்மீன்களின் வழிகாட்டலும் விலங்கு, பறவைகளின் இடப்பெயர்ச்சிக்குக் காரணங்களாக இருந்தாலும், அனைத்திற்கும் மேலான இறைவனின் வழிகாட்டலே அனைத்திற்கும் ஆதாரமாக உள்ளது.***

***'இவையனைத்தும் (யாரையும்) மிகைத்தோனும் (யாவையும்) நன்கு அறிந்தோனுமாகிய அல்லாஹ்வின் திட்டந்தான்'***

***'அல்லாஹ்வே அனைத்தும் படைத்தவன், அவனே எல்லாவற்றினுடையவும் பாதுகாவலன்' (அல்குர் ஆன் :39:62)***

***'இன்னும் உங்களைப் படைத்திருப்பதிலும், உயிர் பிராணிகளிலிருந்து (பலவற்றை) அவன் பரவச் செய்திருப்பதிலும், உறுதி கொள்கின்ற கூட்டத்தினருக்குப் (பல) சான்றுகள் இருக்கின்றன.' (அல்குர் ஆன்: 45:4)"(கவிமணி கா. அப்துல் கபூர், மிக்க மேலானவன், பக்:53)***

*உலகில் படைக்கப்பட்ட உயிரினங்களான எறும்பு, காகம் போன்றவற்றை மனித வாழ்க்கைக்கு வழிகாட்டியாக அமைத்துள்ளான். அவற்றைக் கொண்டு மனிதன் தன் வாழ்க்கையை சிறப்பாக்கி கொள்கிறான். இவ்வாறு எறும்பைக் கொண்டு மனிதனின் வாழ்க்கைக்கு வழி காட்டும் நிலையை பின்வருமாறு காண்போம்.*

***"உலகையே அரசோச்சிய சுலைமான் (அலை) அவர்களும், அவர்களின் ஜின்கள், மனிதர்கள் கொண்ட பெரும்படைகள் எறும்புகள் வசிக்கும் ஓர் ஓடையின் அருகில் சென்ற போது ஒரு பெண் எறும்பு மற்ற எறும்புகளை நோக்கி இவ்வாறு கூறியது:***

***"எறும்புகளை! நீங்கள் உங்கள் வீடுகளுக்குள் நுழைந்து கொள்ளுங்கள். சுலைமானும் அவரது படையும் நீங்கள் இருப்பதை அறியாது உங்களை தங்கள் கால்களால் மிதித்திட வேண்டாம்." (அல்குர்ஆன் : 27:18)***

***பெண் எறும்பின் சொல்லிற்கு கட்டுப்பட்டு அனைத்து எறும்புகளும் புற்றுகளுக்குள் சென்றதின் வழியாக தலைமைக்கு கட்டுப்பட வேண்டும் என்ற நல்லதொரு பாடத்தையும் தன் சமுதாயத்தை அழிவிலிருந்து பாதுகாத்து சமூக அக்கறையுடன் நடந்து கொண்ட பெண் எறும்பினை பாராட்டி ஒரு அத்தியாயத்திற்கே எறும்பு அத்தியாயம் என பெயர் சூட்டியும் அல்லாஹ் தனியொரு மரியாதையையும் எடுத்துக்காட்டியுள்ளான்.***

***எறும்புகளின் சேமிப்புத் திட்டத்தை மனித சமுதாயம் உயர்ந்த பாடமாக எடுத்துக் கொள்ள வேண்டும் மழைக்காலத்திற்கு அவசியமான உணவுகளை ஏனைய காலங்களில் தேடி சேமித்துக்***

***கொள்ளும். மழைக்காலத்தில் ஓய்வில் இருக்கும்."(ஜே.ஏ.நைனார் முஹம்மது பாகவீ, குர்ஆனின் குரல், பக்:88-89)***

*காகத்தின் கூட்டு வாழ்க்கையானது, மனிதன் குடும்பமாக வாழ்வதை கற்றுத் தருகிறது. யானைகள் தன் கூட்டத்தில் உள்ளவைக்கு துன்பம் ஏற்பட்டால் அனைத்து யானைகளும் ஒன்று சேர்ந்து விடுகிறது, இவை தனி மனிதனுக்கு பிரச்சனை என்றால் அனைத்து மக்களும் ஒன்றிணைந்து போராடுவதை வெளிப்படுத்துகிறது. புறாக்கள் தன் இணையைப் பிரிந்து வாழாது என்பதன் மூலம் மனிதன் இல்லறம் நடத்தும் போது கணவன், மனைவிக்குள் பிரியாத அன்பை நிலைநாட்ட வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. இவ்வாறு உயிரினங்களின் மூலம் மனிதர்களுக்கு சிறந்த வாழ்க்கை முறையை இறைவன் கற்றுத் தருகிறான். அனைத்து உயிரினங்களையும் படைத்து அவற்றிற்கான உடல் அமைப்பை சீர்ப்பெற செய்து, அதன் வாழ்க்கை தேவைகளை பூர்த்தியாக்கி, சிறந்த முறையில் வழிகாட்டடக்கூடிய இறைவனே மிக்க மேலானவன் என்பதை உணர்த்தி, அவனது சிறப்புமிகு நாற்பண்புகளை விளக்குகிறார் ஆசிரியர்.*

**முடிவுரை**

*மிக்க மேலானவனின் மிகுநாற் பண்புகளில் படைத்தல், ஒழுங்குப்படுத்துதல், விதியை நிர்ணயித்தல் மற்றும் வழிகாட்டுதல் ஆகியவற்றின் சிறப்பு பண்புகளை அவனது அனைத்து உலக படைப்பின் மூலமாக வெளிப்படுத்தி இருப்பது வியக்கத்தக்கது. கண்ணிற்கு தெரிந்த உயிரினங்களைப் போன்றே கண்ணீற்கு புலப்படாத பல உயிர்களையும் வாழ வைக்கின்றான். இது அவனது நாற் பண்புகளின் சிறப்பாகும் என்பதை கட்டுரையின் வாயிலாக ஆசிரியர் விளக்குவதை நாம் அறியலாம்.*

**குறிப்புகள்**


1. *இறையருட் கவிமணி கா. அப்துல் கபூர், மிக்க மேலானவன், நன்னெறிப் பதிப்பகம், திருவிதாங்கோடு -629174, முதற்பதிப்பு -2006.*
2. *மவ்லானா ஷஃபீ அஹ்மது தாவூதி, மனாருல் ஹுதா, மதரஸா காஷிஃபுல் ஹுதா வெளியீடு, சென்னை-77, மாத இதழ் - ஜனவரி 2019.*
3. *ஜே.ஏ.நைனார் முஹம்மது பாகவீ, குர்ஆனின் குரல்,அ.முஹம்மது அஷ்ரஃப் அலீ வெளியீடு, மதுரை -625 001, மாத இதழ் -மே 2014.*